**சிரம வாசனா நிதியம் - 2017**

---

சிரம வாசனா நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, சிரம வாசனா நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்திற்குச் சொந்தமாகவிருந்த ரூபா 103 மில்லியன் நிலையான வைப்புகளது முதிர்வடையும் காலம் 12 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவாகவோ இருந்தபோதும், 01 ஆம் நியமத்தின் 76 ஆம் பந்திக்கு முரணாக அம் முதலீடுகள் நடைமுறை அல்லாத சொத்துக்களாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

2017 ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் அதிகரிப்பு ரூபா 28,488,838 ஆகக் காட்டப்பட வேண்டியபோதும், ரூபா 33,552,553 ஆக அதனைக் காட்டியமையால் ரூபா 5,063,715 அதிகமாகக் குறித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 07 ஆம் இலக்கத்தினது 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 926,125 கிரயமுடைய 14 சொத்து விடயங்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08**

நியமத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியேற்பாடாக இனங்காணப்படுவதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதிருக்க, 2017 ஆம் அணடில் நிதியம் மேற்கொள்ள வேண்டிய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், சட்ட உதவி வழங்குதல், புலமைப்பரிசில் வழங்கல் ஆகிய 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் ரூபா 5,924,524 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் அது காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 33,000 அருவச் சொத்துக்களாக இனங்காணப்பட்ட சொத்துக்கள் அவற்றினது பயன்படுகாலத்தின் போது காலக் கழிவுக்குள்ளாகவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போதிலான பதவியணியினர் செலவினமாகிய ரூபா 225,490 செலவினமாகக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. அதன் காரணமாக, நிதியத்தின் வருடாந்த மிகையும் நடைமுறை அல்லாத சொத்துக்களும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிதியம் பயன்படுத்தும் 06 வகைச் சொத்துக்களின் மீளாய்வாண்டிற்குரிய தேய்மானம் ரூபா 25,839 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) 2018 - 2022 ஆம் 05 ஆண்டுகாலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு நிதியம் செலழித்த தொகை ரூபா 295,175 ஆகும். இது நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவினமாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் சொத்துக்களாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 237(இ) | நுவரேலியா மாவட்டத்தில் நடாத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமின் பொருட்டு பெறப்பட்ட முற்பணத்தைத் தீர்வு செய்யும்போது தங்குமிட வசதிகளுக்குத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய ரூபா 12,000 கொடுப்பனவு செய்யப்பட்டதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா புதிய அதிகாரச் சட்டத்தின் 7(2)1 உப பிரிவு(அ) மற்றும் 13(2) உப பிரிவு என்பன | “சிரம வாசனா” எனும் பெயரிலான லொத்தர் ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் அதற்கு பதிலாக “ஜாதிக சம்பத” எனும் லொத்தரை நடாத்துதல். |

## 3. நிதிசார் மீளாய்வு

------------------------------------------

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

-----------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 13,155,579 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 28,264,114 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 15,108,535 நலிவு அவதானிக்கப்பட்டது. லொத்தர் வருமானம் ஆண்டின் போது ரூபா 19,062,791 குறைவடைந்தமையும் நிர்வாகச் செலவினத்தின் ரூபா 3,657,555 அதிகரிப்பும் நிதியத்தின் நோக்கத்திற்கெனச் செலவிடப்பட்டவை ரூபா 89,155 குறைவடைந்தமையும் இந் நலிவுக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 57,537,862 ஆகவிருந்த நிதியத்தின் மிகை 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 13,155,579 வரை தொடர் நலிவுக்குள்ளாகியிருந்தது. ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 59,973,904 ஆகவிருந்து மீளாய்வாண்டளவில் ரூபா 24,416,576 தொடர் நலிவுக்குள்ளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------------

### 4.1 செயலாற்றல்

-------------------------

#### 4.1.1 திட்டமிடல்

---------------------

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியம் 2013 - 2017 காலப்பகுதிக்கெனத் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்தில் ஒவ்வொரு நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாகவும் நலன் பெறுநர்களை இனங்காண்பது சம்பந்தமாக நிச்சயமான கருத்தை நிதியம் கொண்டிராமை பிரதான நலிவாகக் குறிப்பிட்டிருந்தது. அந்நலிவைக் குறைத்துக் கொள்வதற்கான உபாயங்களை நிதியம் கொண்டிராமையால் 2018 - 2022 காலப்பகுதிக்கெனத் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்திலும் அந்நலிவு மேலும் தொடர்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1998 ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்க நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கம் தெளிவுறக் குறிப்பிடப்படாதிருப்பது நலன் பெறுநர்களைத் தெரிவு செய்வதில் மூலப் பிரச்சினையாக விளங்குவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 - 2017 காலப்பகுதிக்கென நிதியம் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்தில் ஊழியர்களுக்கு நலன்புரி வசதிகளை அளிப்பதற்குத் தயாராக பெருமளவு அரச சார்பற்ற நிறுவனங்கள் இருப்பது நிதியத்திற்கானதொரு வாய்ப்பாகும் (Opportunity) என பகுப்பாய்வின் மூலம் தெரிவித்தபோதும், குறிப்பிட்ட காலப்பகுதியின்போது அச்சந்தர்ப்பத்தை நிதியம் பயன்படுத்துவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புவதற்கான உபாயங்களை இனங்கண்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நோக்கங்களை ஈடேற்றவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருபத்தெட்டு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ரூபா 1.5 மில்லியன் செலவில் நடாத்துவதற்குத் திட்டமிட்டபோதும், அதில் ரூபா 900,000 கிரயமுடைய 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படவில்லை. அது ஏற்பாடு செய்யப்பட்ட தொகையின் 60 சதவீதமாகும்.

(ஆ) தொழில்சார் விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 7 மில்லியன் நிதியேற்பாட்டில் 100 புலமைப்பரிசில்களுக்குரியோருக்கு நலன்களை வழங்கத் திட்டமிட்டபோதும், ரூபா 4.6 மில்லியன் செலவிடப்பட்டு 74 நலன்பெறுநர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களே நடாத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 2.4 மில்லியன் எஞ்சியுமிருந்தது.

(இ) விசேட சேவைகளை ஆற்றுபவர்களுக்கு ரூபா 2.5 மில்லியன் பெறுமதியை வழங்குவதற்கு ஒதுக்கியருந்தபோதும், அந்நிகழ்ச்சித்திட்டம் நடைபெறவில்லை. எனினும், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயல் முன்னேற்றத்தைத் தெரிவிக்கும் அறிக்கையில் 33 சேவை வழங்குனர்களுக்கு ரூபா 0.29 மில்லியன் வழங்கப்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 - 2017 ஆம் ஆண்டுகளுக்கென நிதியம் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்தின் 4.3.1 இன் கீழ் தீவடங்களிலும் நலன்புரிச் நிகழ்ச்சித் திட்டங்கள் சமமான அளவில் நடாத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டின்போது 10 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிட்டு 30 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டபோதும், அதில் 10 நிகழ்ச்சித் திட்டங்களும் இரத்தினபுரி மாவட்டத்திலும் பதுளையிலுமே நடாத்தப்பட்டிருந்தன.

(உ) 2016 ஆம் ஆண்டிற்கென நிதியம் தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது 42 செயற்கைக் கைகளையும் கால்களையும் விநியோகிப்பதற்கு திட்டமிட்டிருந்தபோதும், தெரிவு செய்யப்பட்ட நிரலுக்கு அப்பால் ஒரு நபருக்கு மாத்திரம் விசேடமாக செயற்கைக் கால் வழங்கப்பட்டமை மாத்திரமே நிகழ்ந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 14 பேருக்குச் செயற்கை கை, கால்களை வழங்குவது மீளாய்வாண்டின் இறுதியிலேனும் நடைபெற்றிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களம் மீளாய்வாண்டிற்கென ரூபா 80 மில்லியனை வழங்கியபோதும், நிதிய நோக்கங்களை ஈடேற்றுவதற்கென மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அத்தொகை திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 51 மில்லியன், அதாவது மீளாய்வாண்டில் பெறப்பட்ட தொகையின் 64 சதவீதம் குறித்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாது அரச வங்கிகளில் நிலையான வைப்புகளாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிலவிய முதலீட்டுப் பெறுமதி ரூபா 103 மில்லியனாகும். இதற்குப் புறம்பாக, மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதியத்தின் பொருட்டு திறைசேரி வைப்பாக இருந்த தொகை ரூபா 290 மில்லியனாகும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கென நிதி நிலைமை விபரத்தில் ரூபா 5,924,524 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின்போது அவ்வாறு ஏற்பட்ட செய்யப்பட்ட நிதியில் ஏறக்குறைய 21 சதவீதம் 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் தினமளவில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கெனச் செலவழிக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றினுள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குப் பொருட்களைக் கொள்வனவு செய்வது மாத்திரமே மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், நிதியமானது முறையான முகாமைத்துவமின்றி நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடலும் அத்திட்டங்கள் அமுலாகுதலில் வினைத்திறன் இன்மையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2016 ஆம் ஆண்டில் ரூபா 364,781 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 03 தொலைக்காட்சி இயந்திரங்கள் நிதியத்தின் நோக்கங்களைப் பிரசாரம் செய்யும் நோக்குடன் தொழில் செயலக வளாக முன்றலில் பொருத்தப்பட்டுள்ள தொலைக்காட்சி இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 18 ஆகவிருந்தது. அதில் 02 உதவி முகாமையாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அடைதலும்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரது கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுவதுடன், மீளாய்வாண்டின் பொருட்டு நிதியம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

(அ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களம் வெளியிட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையினது 9 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒரு அறிக்கை மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதியமானது 2017 ஆம் ஆண்டிற்கென உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்றை மேற்படி சுற்றறிக்கையின் உள்ள மாதிரிப் படிவத்திற்கேற்பத் தயாரித்திருந்தபோதும், முறைமைப் பகுப்பாய்வு, செயலாற்றல் மதிப்பாய்வு, விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் என்பன தொடர்பான நிச்சயிக்கப்பட்ட விடயங்கள் அதில் உள்ளடங்கியிருக்கவில்லை.

## 6.2 பொருட்கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

### 6.2.1 பொருட் கொள்வனவு

பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 க்கமைய நிதியத்தின் பொருட் கொள்வனவுத் திட்டம் 2017 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் செய்ய வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ரூபா 9,882,474 பொருட் கொள்வனவு தொடர்பான விபரம் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

நிதியத்திற்கான 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 2.2.5 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் முடிவுறவில்லை.

(அ) ஒவ்வொரு ஆண்டிலும் நடாத்தப்பட வேண்டிய லொத்தர்களின் எண்ணிக்கை மற்றும் லொத்தர் வகைகளின் விபரம் தொடர்பாக ஒருமைப்பாடு சிரம வாசனா நிதியத்திற்கும் லொத்தர் சபைக்கும் இடையே ஏற்பட்டிராமை.

(ஆ) வழங்கப்படும் பரிசுகள் தொடர்பாகவும் பரிசுக்கு உரிமை கோராமை தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக லொத்தர் சபையும் நிதியமும் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டியபோதும் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

(இ) லொத்தர் மூலம் பெறப்படும் தொகையில் வழங்கப்படும் பரிசு மற்றும் லொத்தர் சீட்டுழுப்புக்கான செலவினம் லொத்தர் சபைக்கும் நிதியத்திற்குமிடையே எந்தளவில் இருக்க வேண்டுமென இருசாரரதும் இணக்கப்பாடு.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பொருட் கொள்வனவுச் செயற்பாடு | • தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் விடயம் தொடர்பான நிபுணத்துவம் உள்ள ஒருவரைச் சேர்த்துக் கொள்ளாமை.<br>• கேள்விகளைத் திறக்கும் குழு அங்கத்தவர்களால் அறிக்கைகளில் கையெழுத்திடப்பட்டிருக்காமை.<br>• கேள்விகளை மதிப்பாய்வு செய்கையில் கேள்வி கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்காத விதிமுறைகளை அடிப்படையாக ஏற்றுக்கொண்டிருந்தமை. |
| (ஆ) நிதிய நோக்கத்திற்கான செலவினத்தில் கட்டுப்பாடு | • நலன் பெறுநர்கள் தெரிவில் நிச்சயமான விதிமுறைகள் பின்பற்றப்படாமை |

- தெரிவு செய்யப்பட்ட நலன் பெறுநர்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் கையெழுத்திட்ட நிரல் நிதியத்தில் இருக்காமை

- மூன்றாம் நபர்களிடத்து வழங்கப்பட்ட பொருட்கள் தெரிவு செய்யப்பட்ட நலன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்டதை உறுதி செய்யும் எழுத்துமூல ஆவணம் பெறப்படாமையும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையும்.